# Apen og krokodillen

முன்னொரு காலத்தில் ஒரு குரங்குக்குட்டி தனது அப்பா அம்மாவுடன் ஓர் சிறிய காட்டில் வசித்து வந்தது. அந்தக் காட்டில் பெரிய பழ மரங்களும் இருந்தன. அங்கு ஓர் சிறிய குளமும் இருந்தது. அந்த குளக்கரையில் ஓர் பெரிய பழமரம் ஒன்று நின்றது. ஒவ்வொரு நாளும் அந்தக்குரங்குக்குட்டி மரத்திலிருந்து மரத்திற்கு தாவித் தாவி விளையாடுவது வழக்கம். ஒரு நாள் தன்னந்தனியே விளையாடிவிட்டு வீடு திரும்பிய குரங்குக்குட்டி, அம்மாக்குரங்கிடம் “ அம்மா எனக்கு ஒரு நண்பனும் விளையாட இல்லை, எனக் குறைப்பட்டது.” அதற்கு அம்மாக்குரங்கு நீங்கள் இன்னும் கொஞ்சம் வளர்ந்தாப்பிறகு நிறைய நண்பர்கள் கிடைப்பார்கள் என ஆறுதல் கூறியது.

ஒரு நாள் அந்தக் குரங்குக் குட்டி குளக்கரையில் உள்ள மரத்தில் தாவித் தாவி விளையாடியது. அப்போது அந்த குளத்தில் ஏதோ ஒன்று மிதந்து வருவதைக் கண்டது. இரண்டு பெரிய கண்களும் பெரிய உடலும் தெரிந்தது. இதைக் கண்ட குரங்குக் குட்டி அதன் அருகே சென்று நீ யார் எனக் கேட்டது.

முதலை:“ம், என்னுடனா கதைக்கின்றாய? எனது பெயர் முதலை”.

குரங்குக்குட்டி: நல்லது முதயைாரே நாங்கள் நல்ல நண்பர்களாய் இருப்போமா? என்றது.

முதலை: ம் ம் நண்பனா, என்னுடனா?

குரங்குக்குட்டி: ஆமாம் நல்ல நண்பர்களாய் இருப்போமா?

முதலை: “சரி நாங்கள் நல்ல நண்பர்களாய் இருப்போம்”. என்றது. அதன்பின்பு முதலையும், குரங்குக்குட்டியும் ஒளித்துப்பிடித்து, வட்டக்கோடு, கை தட்டி என பல விளையாட்டுக்கள் விளையாடினர்.

*Kitchu machu tambalam*

*Kija maja tambalam*

*Machu machu tambalam*

*Maja maja tambalam*

எனப்பாடி ஆடி மகிழ்ந்தனர்.இருட்டத் தொடங்கியதும் இருவரும் வீடு திரும்பினர். குரங்குக்குட்டி தனக்கு ஒரு நல்ல நண்பன் கிடைத்து விட்டான். அதன் பெயர் முதலை என அம்மாக்குரங்கிடம் கூறியது. முதலை பயங்கரமானது, அதனுடன் விளையாடக்கூடாது என அம்மாக்குரங்கு கண்டிப்பாக கூறியது.

அன்று இரவு முழுவதும் குரங்குக்குட்டி என்ன செய்யலாம் என உறங்காமல் யோசித்தது. திடீரென அதற்கு நல்ல யோசனை தோன்றியது. விடிந்ததும் குளக்கரைக்குச் சென்று முதலைக்காக காத்திருந்தது. முதலை வந்ததும், அதனிடம் நீங்கள் மிருகங்களை பிடித்து சாப்பிடுவீர்களாம் என எனது அம்மா சொன்னார். நான் உங்களிற்கு நிறைய பழங்கள் பிடுங்கித் தருகிறேன். அதைச் சாப்பிடுங்கள்.அப்போது மிருகங்களை சாப்பிடத் தேவையில்லை என குரங்குக்குட்டி கூறியதுடன் மாம்பழங்கள், வாழைப்பழங்களைப் பறித்து முதலையிடம் சாப்பிடும்படி கொடுத்தது.

இவ்வாறாக முதலைக்கு குரங்குக்குட்டி ஒவ்வொரு நாளும் பழங்களைப் பிடுங்கிக் கொடுப்பதும், விளையாடுவதுமாக இருந்தது. அத்துடன் முதலை தன் மனைவிக்கும் பெரிய கூடை நிறைய பழங்களை ஒவ்வொரு நாளும் கொண்டு சென்றது.
ஒரு நாள் பெண் முதலை ''ம் ம் இந்த பழங்கள் எவ்வளவு இனிமையாக உள்ளது. இப் பழங்களைச் சாப்பிடும் குரங்கின் ஈரல் எவ்வளவு இனிமையாக இருக்கும். நாளை அந்த குரங்குக் குட்டியை எப்படியாவது அழைத்து வாருங்கள். நாம் அதனைச் சாப்பிடலாம்''. என ஆண்முதலையிடம் கூறியது.
அது தன்னுடைய நல்ல நண்பன் என ஆண்முதலை மறுத்தபோதும் பின்பு குரங்குக்குட்டியை கூட்டி வர ஒப்புக்கொண்டது.
மறு நாள் குரங்குக்குட்டி முதலையுடன் விளையாட ஆவலுடன் காத்திருந்தது. முதலை வருவதைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் துளிக்குதித்தது.அங்கு வந்த முதலை குரங்குக்குட்டியிடம் தனது வீட்டிற்கு விருந்திற்கு வரும் படி அழைத்தது.

குரங்குக்குட்டியும் ''விருந்திற்கா?, உண்மையாகவா? நீங்கள் எவ்வளவு நல்லவர். ஆனால் எனக்கு நீச்சல் தெரியாதே, நான் எப்படி வருவது'' எனக் கேட்டது. முதலை தனது முதுகில் ஏற்றிச் செல்கிறேன் என்றதும் குரங்குக்குட்டியும் துள்ளிக்குதித்து முதலையின் முதுகில் ஏறிக் கொண்டது. முதலை நீந்தி குளத்தின் நடுவில் வந்தவுடன், ''குரங்குக்குட்டியே நன்றாக ஏமாந்து விட்டாய். நானும் எனது மனைவியும் உனது ஈரலை சாப்பிடப் போகின்றோம்'' என்றது.

குரங்குக்குட்டி ''சாப்பிடப் போகின்றீர்களர்! எனது ஈரலையா? என பதட்டத்துடன் கேட்டது. ஆம் நாம் மிருகங்களை சாப்பிடுவது வழக்கம் தானே. என்றது முதலை. குரங்குக்குட்டி என்ன செய்யலாம் எப்படித்தப்பலாம் என யோசித்தது. உடனே அதற்கு நல்ல யோசனை தோன்றியது. ''முதலையாரே! நீங்கள் இதை ஏன் அப்பவே கூறவில்லை. எனது ஈரலை மரத்தில் காயவைத்து விட்டு வந்து விட்டேன். என்னை மீண்டும் கரைக்குக கூட்டிச் செல்லுங்கள். நான் மரத்தில் காயும் எனது ஈரலை எடுத்து வருகின்றேன்''. என்றது குரங்குக்குட்டி.

முதலையும் மீண்டும் குளக்கரைக்கு நீந்தியது. கரைக்கு வந்ததும் துள்ளிக்குதித்து பாய்ந்து சென்று மரத்தில் ஏறிய குரங்குக்குட்டி முட்டாள். முதலையே! யாராவது ஈரலை வெளியே காய விடுவார்களா? நீ எனது நண்பனேயில்லை. இனிமேல் ஒருநாளும் உன்னிடம் விளையாடவே மாட்டேன், எனக் கூறிவிட்டு வீட்டிற்கு சென்று தனது தாயாரிடம் நடந்ததைக் கூறியது. முதலையிடமிருந்து குட்டிக்குரங்கு தப்பிவந்ததைத் நினைத்த அம்மாக்குரங்கு தனது குட்டியை கட்டி அணைத்துக்கொண்டது.